முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 05.03.2026.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

அசல் வழக்கு எண். 48/2025

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுந்தர் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | சாரங்கபாணி | வயது | : | 58 |
| ஊர் | : | பில்லாந்தி | தொழில் | : | வாட்ச்மேன் |

**வா.சா. 1 (சுந்தர்): பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான்தாக்கல் செய்திருக்கும் வழக்கு சொத்தானது பில்லாந்தி கிராமத்தில் உள்ள சர்வே எண் 6ஏ2 என்றால் சரிதான். நான் கிரயம் பெறுவதற்கு முன்பு வில்லங்கம் அடங்கல் சரிபார்த்துதான் வாங்கினேனா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது என்பதனால் வாத்தியார் ஒருவர் வாங்கிக்கொடுத்தார். பொதுவாக பஞ்சமா் நிலத்தினை கிரயம் பெறுவதும் கொடுப்பதும் தவறு என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்திருக்குனம் பதிலுரையை பற்றி எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மேற்படி பதிலுரையில் பிரதிவாதிகள் வழக்கு சொத்தானது பஞ்சமா் நிலம் என்றும் கிரயம் பெற்றது தவறு என்றும் குறிப்பிட்டுள்ளதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் வட்டாட்சியரிடம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்தானது பஞ்சமா் நிலம் என்றும் அதனை மீட்டுக்கொடுக்கவேண்டும் என்று மனு ஒன்றினை தாக்கல் செய்தார்களா என்றால் தாக்கல் செய்தார்கள்.

2. அதன் பேரில் வட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் அனைத்தும் எனது வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அதேபோதல்தாவா சொத்தானது பஞ்சமா் நிலம் இல்லை என்பதற்கும் எனக்கு சொந்தமான சொத்து எனபதற்கான ஆவணத்தையும் கொடுத்துள்ளேனா என்றால் வட்டாட்சியரிடம் கொடுத்துள்ளேன். மேற்படி விசாரணையில் நிலுவையில் உள்ளதா என்றால் என்னுடைய பட்டா எல்லாம் சரியாக உள்ளது என்றும் பிரதிவாதிகள் கொடுத்த மனுவினை தள்ளுபடி செய்துவிட்டார்கள். மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவின் நகலினை வட்டாட்சியர் எனக்கு கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அந்த உத்தரவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. நான் சொல்வது பொய் என்றும் வட்டாட்சியர் அவர்கள் இந்த வழக்கினை நிலுவையில் இருப்பதனால் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்காமல் மனுவினை நிலுவையில் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் குறிப்பிட்டுள்ள பஞ்சமா் சொத்துஎன்ற விவரத்தினை ரத்து செய்து எந்தவித ஆணையும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது பஞ்சமா் நில சொத்து என்பதனால் நான் குறியீடு செய்து இருக்கும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணமானது சட்டத்திற்கு முரணானது என்று சொன்னால் சரியல்ல. அதனால் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் நான் வழக்கு சொத்தில் உரிமை

கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் என்னுடைய தாவா வழக்கினை தள்ளபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கின் வியாஜ்ஜியமூலம் சடடத்திற்கு முரணானது என்பதனாலும் வழக்கு சொத்து வருவாய்த்துறையில் நடவடிக்கை எடுப்பதனை தடுப்பதற்காகவே இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது.**

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2026.03.05 17:30:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு